www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

KK12T

**கன்னியாகுமரி மாவட்டம்**

**காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024**

-----

**வகுப்பு 12**

**பொதுத்தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:
1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

1) 'மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2) சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

3) 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாளி

4) அய்யப்ப மாதவன் வெளியிட்ட கவிதைக் குறும்படம்
   அ) இன்று ஆ) நேற்று இ) காலை ஈ) ஓசை

5) இந்தியாவின் முதல் பொது நூலகம்
   அ) கன்னிமாரா நூலகம் ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்
   இ) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் ஈ) மறைமலையடிகள் நூலகம்

6) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை ............
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

7) புணரின் புணராது பொருளே பொருள்வயின்
   பிரியின் புணராது புணர்வே - என்னும் அடிகள் இடம்பெற்ற நூல்
   அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை

8) தமிழில் திணைப்பாகுபாடு ................ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
   இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

9) பொருத்துக.
   அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
   ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்
   இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
   ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா
   அ) 2, 3, 4, 1 ஆ) 4, 3, 1, 2 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 4, 3, 1

10) படிமம் என்பதன் பொருள்
   அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11) பாரதியார் நடத்திய இதழ்கள்

அ) சூரியோதயம், தேசபக்தன்
ஆ) சூரியோதயம், நெல்லைத் தென்றல்
இ) லோகோபகாரி, கர்மயோகி
ஈ) சூரியோதயம், கர்மயோகி

12) பொருந்தாததைக் கண்டறிக.

அ) அறுப்பு ஆ) வயிறுகள் இ) அஞ்ஞாடி ஈ) ரீதி

13) 'மலரடி' என்பதன் இலக்கணக்குறிப்பு ..........

அ) உம்மைத் தொகை ஆ) பண்புத்தொகை இ) வினைத் தொகை ஈ) உவமைத்தொகை

14) ஏப்ரல் 22-ஆம் நாள் ............ தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

அ) உலக நீர் நாள்
ஆ) உலக உணவு நாள்
இ) உலகப் புவி நாள்
ஈ) உலகப் பேரிடர் தவிர்ப்பு நாள்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15) சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்?

16) முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

17) 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?

18) கலிவிழா, ஒலி விழா - விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) நடைஅழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20) பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?

21) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22) முடிந்தால் தரலாம், முடித்தல் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்

23) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

தலை, தளை, தழை

24) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக**

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீது தான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்

25) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) விம்முகின்ற ஆ) பேசுவார்

26) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) உன்னையல்லாமல் ஆ). பூம்பாவாய்

27) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

கோவில்

28) **பேச்சு வழக்கை எழுத்து வழக்கமாக மாற்றுக.**

இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ

29) **கலைச் சொல்லாக்கம் தருக.**

அ) Metro Train ஆ) Jurisdiction

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

கிணற்றுத்தவளை போல

30) கீழ்க்காணும் சொல்லுருபைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடரமைக்க.

தானே <

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31) 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) கூதிர்காலத்தின் தன்மையால் நிகழ்ந்தவை என நெடுநல்வாடை குறிப்பிடுவன யாவை?

33) சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.

34) பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=

35) மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறிப்பிடுக.

36) தாய்வழிக் குடும்பம் குறித்துச் சங்க இலக்கியத்தில் குறிப்பிடும் செய்திகள் யாவை?

37) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க

38) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=1

39) அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

முச்சங்கங் கூட்டி
  முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
  அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
  சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
  அமைத்த பெருமாட்டி !

– கண்ணதாசன்

41) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில்** அமைத்து எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

(அல்லது)

ஆ) யானைக்கும் அடி சறுக்கும்

42) அ) வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43) **தமிழாக்கம் தருக**

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life
3. Knowledge of languages is doorway to wisdom
4. The limits of my language are the limits of my world.

43) **செவி மாற்றத்திறனாளர்களுக்கான மாற்றுவினா**

**கீழ்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே. மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள்:**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

44) அ) தமிழின் சீரிளமைத்திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

45) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

**(அல்லது)**

ஆ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டு விளக்குக.

46) அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க

**(அல்லது)**

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

**4+2=6**

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.**

அ) 'இதில் வெற்றி பெற' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளன. 'விண்வேறு' எனத் தொடங்கும் மனப்பாட பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'பொருள்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

- - - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com